FINDING Your Way®
# உங்கள் வழியைத் தெரிந்து கொள்க
*அல்ஸைமர் உள்ளவர்களுக்கு,*
*ஒவ்வொரு செயலும் முக்கியம்.*

## அல்ஸைமர் இருக்கும் ஒருவர் காணாமல் போகும்போது

கடினமான காரியமென்றாலும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் தனியாக இல்லை. உங்களுக்கு உதவ நிறைய சேவையாளர்கள் இருக்கின்றார்கள். கீழே உள்ள பட்டியலைப் பயன்படுத்தினால் காணாமல் போனவரை விரைவில் பாதுகாப்பாக வீட்டுக்குக் கொண்டுவர முடியும்.

### காவல்துறையினரைக் (911) கூப்பிடுங்கள். தேடுவதென்பது அவசரமான விடயம் - தாமதிக்க வேண்டாம்!

1. காவல்துறையினரை (911) உடனடியாக அழைத்து அல்ஸைமரினால் பாதிக்கப்பட்ட ஒருவர் காணாமல் போய்விட்டார் எனும் விடயத்தைத் தெரியப்படுத்துங்கள்.
2. அவர்களை கடைசியாக எப்போது எங்கே பார்த்தீர்கள் என்பதனைக் காவல்துறையினரிடம் கூறவும்.
3. காவல்துறையினருக்கு "அடையாள" விபரங்களைக் கொடுங்கள். கடைசியாக எடுத்த புகைப்படத்தையும் கொடுங்கள்.
4. அவருக்கு வேறு ஏதாவது சுகவீனம் இருந்தால், அவர் உட்கொள்ளும் மருந்து வகைகளையும் தெரியப்படுத்துங்கள்.
5. அவர் போகக்கூடிய இடங்களையும் காவல்துறையினருக்குத் தெரியப்படுத்துங்கள்.
6. அவர் ஏதாவது திட்டத்தில் MedicAlert® Safely Home®, Project Lifesaver® பதிவு செய்திருந்தால் காவல்துறையினருக்குத் தெரியப்படுத்துங்கள். அவரிடம் அடையாள அட்டையோ, அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய உபகரணமோ இருந்தால் அதனையும் தெரியப்படுத்துங்கள்.

## ஆதரவைத் திரட்டுங்கள்

1. அவர் தானாகத் திரும்பி வந்தால் அவரை வரவேற்பதற்கு வீட்டில் ஒருவர் இருப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
2. உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் ஆகியோரிடம் அவர் காணாமல் போனதனைத் தெரியப்படுத்துங்கள்.
3. அவரிடம் வாகனம் இருந்தால் (வாகன இலக்கம், நிறம், உருப்படிவம்) போன்ற விபரங்களைக் காவல்துறையினருக்குத் தெரியப்படுத்துங்கள்.
4. அவர் கிரெடிட் காட்டை பயன்படுத்துபவர் என்றால், அவரைக் காணவில்லை என்று கிரெடிட் காட் நிறுவனங்களுக்கு தெரிவிப்பது பற்றிக் காவல்துறையினரிடம் கூறுங்கள். அவர் கிரெடிட் காட் பயன்படுத்தும் இடங்களை கண்காணித்து அவர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியும்.

## ஒரு விரைவான தேடலைச் செய்யுங்கள்

1. வீட்டின் உள்ளே பாருங்கள்:
   - ✓ படுக்கையறைகள் மற்றும் படுக்கையின் கீழ், உடுப்புகள் வைக்கும் பகுதிகள்
   - ✓ குளியலறை(கள்)
   - ✓ நிலக்கீழ் அறைகள் மற்றும் மறைவான எளிதாக நுழையக்கூடிய முடக்குகள்
   - ✓ வாகனக்கூடம், இணைக்கப்பட்ட அல்லது வீட்டிற்குப் பின்புறத்திலோ அருகிலோ உள்ளவை
2. கார் சாவிகள் அல்லது கிரெடிட் காட் போன்ற பொருட்களை காணவில்லையா எனப் பார்க்கவும். இவைகள் அவர் எங்கிருக்கிறார் என்பது பற்றி தடயங்களை அறிய உதவி செய்யும்.
3. உங்கள் வீட்டை சுற்றிப் பாருங்கள் - நீங்கள் ஒரு மூடப்பட்ட புறத்தில் இருந்தால் மட்டுமே இதைச் செய்யுங்கள். நீங்கள் ஒரு கிராமப்புறப் பகுதியில் இருந்தால், தனியாகத் தேட வேண்டாம். இது உங்களை ஆபத்தில் கொண்டு சேர்ப்பது மட்டுமன்றி காவல்துறையினரின் தேடலைச் சிரமத்திற்குள்ளாக்கலாம்.

*Adapted from materials developed by Alzheimer Society British Columbia.*